# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சியில் மன்ற அவசரக் கூட்டம் 23.09.2022 ஆம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 03.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள் : 1</u>

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சிப் பகுதிகளுக்கு இராமநாதபுரம் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் முலம் 0.5MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 02.09.2022 தேதியன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் நேரடி ஆய்வு கூட்டத்தில் காவேரி ஆற்றில் இருந்து புதிய குடிநீர் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு வருவதை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை தொடர்ந்தும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுரையின்படியும் இத்திட்டத்தில் கீழக்கரை நகராட்சியையும் இணைத்து குடிநீர் வழங்குவதற்கு மேலாண்மை இயக்குநர், குடிநீர் வடிகால் வாரியம் சென்னை அவர்களுக்கு கீழக்கரை நகர்மன்ற தலைவர் அவர்கள் மூலம் கடிதம் அனுப்பப்பட்டதை தொடரந்து மேற்படி திட்டத்தில் கீழக்கரை நகராட்சியையும் இணைத்து கூடுதலாக குடிநீர் வழங்கும் பொருட்டும் கீழக்கரை நகர்மக்களின் எதிர்கால குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் நகர் பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள Amrut 2.0 திட்டம் **New Multi Village Scheme** திட்டத்தில் கீழக்கரை நகராட்சியையும் சேர்த்து செயல்திட்டம் தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயற்பொறியாளர் இராமநாதபுரம் அவர்களை கேட்டுக் கொள்வது தொடர்பாக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 519/2021/இ1)

<u>அலுவலகக்குறிப்பு</u>

கீழக்கரை நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையின்றி போதுமான அளவிற்கு வழங்கிட புதிய குடிநீர் திட்டங்கள் செயல்படுத்த அவசியம் ஏற்பட்டுள்ளது.எனவே, வரும் 2024ம் ஆண்டின் உச்சகட்ட குடிநீர் தேவையை Amrut 2.0 திட்டத்தில் புதிய குடிநீர் திட்ட பணிகள் செயல்படுத்த முன்மொழிவு தயாரிக்க செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இசைவு தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.96</u>**

கீழக்கரை நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையின்றி போதுமான அளவிற்கு வழங்கிட புதிய குடிநீர் திட்டங்கள் செயல்படுத்த அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, வரும் 2024ம் ஆண்டின் உச்சகட்ட குடிநீர் தேவையை Amrut 2.0 திட்டத்தில் புதிய குடிநீர் திட்ட பணிகள் செயல்படுத்த முன்மொழிவு தயாரிக்க செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு இசைவு தெரிவிக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**ஒப்பம்/— பை. செஹனாஸ் ஆபிதா**
**நகர்மன்ற தலைவர்**
**கீழக்கரை நகராட்சி**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**